RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# கவிப்பித்தன் நாவல்களில் சாதிய அடக்குமுறைகள்

த. சூரியா [அ, *], ஜ. சைராபானு [அ]

[அ] தமிழ்த்துறை, அரசு கலைக் கல்லூரி, உடுமலைப்பேட்டை-642126, இந்தியா

# A Study of Caste Oppression in Kavippithan's Novels

T. Surya [a, *], J. Sairabanu [a]

[a] Department of Tamil, Government Arts College, Udumalpet-642126, India

* Corresponding Author: suryat2309@gmail.com

**ABSTRACT**

The social structure of India has historically been shaped by a system of caste-based hierarchy and oppression. The communities placed at the lowest levels of this hierarchy have long been subjected to discrimination, exclusion, and social injustice. Although the Constitution of India guarantees equality, human rights, and social justice, marginalized communities continue to experience caste-based oppression in various aspects of contemporary social life.Against this backdrop, this study examines the portrayal of caste oppression in Kavippithan's novels Madavali, Sengai, and Neevaanathi. It analyzes how members of marginalized communities are subjected to discrimination and oppression in the spheres of family, marriage, education, politics, and economic life. The study further explores the social, psychological, and economic consequences of these oppressive structures as represented in the novels, highlighting the author's critique of caste inequality and its enduring impact on marginalized communities.

**Keywords:** Kavippithan, Caste Oppression, Marginalized Communities, Social Structure

## முன்னுரை

இந்திய சமூக அமைப்பு வரலாற்று ரீதியாக சாதிய அடக்கு முறையை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. அந்த அடக்கு முறையின் அடித்தளத்தில் வைக்கப்பட்டவர்கள் தாழ்த்தப்பட்ட மக்கள். அரசியல் சட்டம் சமத்துவம், மனித உரிமை, சமூக நீதி ஆகியவற்றை உறுதி செய்திருந்தாலும் நடைமுறை சமூக வாழ்வில் தாழ்த்தப்பட்ட மக்கள் பல நிலைகளில் தொடர்ந்து சாதிய அடக்குமுறைகளை எதிர்கொண்டு வருகின்றனர். இவ்வாறு மடவளி, சேங்கை, நீவாநதி ஆகிய நாவல்களில் தாழ்த்தப்பட்ட மக்கள் குடும்பம், திருமணம், கல்வி, அரசியல், பொருளாதாரம் போன்றவற்றில் எவ்வாறு அடக்குமுறைக்கு உள்ளாக்கப்படுகிறார்கள் அதன் விளைவுகள் என்ன என்பதை இவ்வாய்வு ஆராய்கிறது.

## கலப்புத் திருமணம்

மேல் சாதி, கீழ் சாதி சமூகத்தினர் இடையே நடக்கும் கலப்புத் திருமணமானது வெளிப்படையாக சமூக முன்னேற்றமாகத் தோன்றினாலும் அதன் உள்நிலை சிக்கல்கள் என்னென்ன என்பது பற்றி மடவளி நாவலில் தீவிரமாகச் சித்தரிக்கப்படுகின்றன. திருமணத்தின் ஆரம்ப நிலையானது காதல் மற்றும் சீர்திருத்த மனப்பான்மையில் நடைபெறுகிறது. இது தீண்டாமையை உடைக்கும் செயல் போல காட்டப்பட்டாலும் அதை ஏற்றுக் கொள்ளல் என்பது தனி நபர் அளவிலேயே முடிகிறது. சமூக அளவில் இல்லை. குடும்பம், உறவினர்கள், கிராம மக்கள் முழுமையாக ஏற்க மறுக்கின்றனர். திருமணம் செய்து கொண்டாலும் சாதி மாறாது என்ற மனநிலை தொடர்கிறது.

கலப்புத் திருமணம் “சாதி ஒழுக்கக்கேடு” என கருதப்படுகிறது. குறிப்பாக மேல் சாதி கீழ்சாதி இணைவு சமூகத்திற்கு எதிரான குற்றமாக கருதப்படுகிறது. இத்திருமணத்தால் காதலர்கள்

தாக்கப்படுதல், கொலை செய்யப்படுதல், கட்டாயத் திருமணம் செய்தல், தாழ்த்தப்பட்ட குடும்பத்தைத் தாக்குதல் போன்ற நிகழ்வுகள் தொடர்ந்து நடந்து வருகிறது என்பதனை,

"ஒரு அம்டச்சிய கூட உடாதிங்கடா துணிய

அவுத்து அம்மணமா தெருவுல தொறத்துங்கடா"[1] (கவிப்பித்தன், மடவளி, ப.100)

கலப்புத் திருமணத்தால் ஊரில் வசிக்கும் நாவிதர் சமூகத்தினர் அனைவரையும் அடித்துத் துன்புறுத்தினர்.

குடிசைகளைப் பிரித்துக் கதவுகளை உடைத்தனர். மூன்று வயது பெண் குழந்தையின் வலது கைமூட்டு விலகியது. மூன்று மாத கர்ப்பிணியின் கரு கலைந்தது. பெண்களின் ஆடைகளை உருவி மானபங்கம் செய்தனர். உயிரைக் கொல்லும் அளவிற்கு ஜாதி வெறி பிடித்தவர்களாக மக்கள் இருக்கிறார்கள் என்பதை மடவளி நாவலின் வழி ஆசிரியர் கூறுகிறார்.

இதுபோன்ற வன்முறைக்குக் காவல்துறை, உள்ளூர் அரசியல் தலைவர்கள், சாதி அமைப்பு அனைத்தும் மேல் சாதி தரப்பிற்கு சார்பாக செயல்படுகிறது. இதனால் பாதிப்பிற்குள்ளான தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நியாயம் கிடைப்பதில்லை. மேலும் பொய் வழக்குகளில் சிக்க வைக்கப்படுதல், பாதுகாப்பு மறுப்பு, சட்டத்தை தாழ்த்தப்பட்டோருக்கு எதிராக திருப்புதல் போன்ற காரணங்களினால் பாதிக்கப்பட்டவர்கள் மேலும் சட்டத்தாலும் ஒடுக்கப்படுகிறார்கள்.

## கலப்புத் திருமணங்களால் குடும்பங்கள் எதிர்கொள்ளும் இன்னல்கள்

கலப்புத் திருமணத்தால் குடும்பங்கள் ஊரை விட்டு ஒதுக்கி வைக்கப்படுகிறார்கள். வேலை வாய்ப்பு மறுக்கப்படுகிறது. கடைகளில் பொருட்கள் தர மறுக்கப்படுகின்றன. பொதுப் பாதை, நீர் நிலைகள் பயன்படுத்த அனுமதி மறுக்கப்படுகிறது. இது போன்ற காரணங்களால் பொருளாதார ரீதியாக வாழ்வாதாரங்கள் நேரடியாக பாதிக்கப்படுகிறது.

"அன்றிலிருந்து தனித்தீவு போல ஆகிவிட்டது சண்முகம் குடும்பம். எதிர் வீட்டில் இருக்கும் சொந்த சித்தப்பாமார்கள் கூட அவர்களுடன் பேசுவதில்லை. இவர்களின் டிராக்டரை ஏர் ஓட்டவோ, குப்பை எருலோடு ஓட்டவோ யாரும் கூப்பிடுவதில்லை. இது சண்முகத்துக்கு இன்னொரு விதமான நரகமாக இருந்தது. மகளைப் பிரிந்து அனுபவித்த வேதனையை விட இந்த வேதனை தாங்க முடியாததாக இருந்தது"[2] (கவி பித்தன், மடவளி, பக்.150-151).

இதுபோன்ற மேல் ஜாதி, கீழ்சாதி கலப்புத் திருமணங்களால் மேல் சாதியினர் இரண்டு குடும்பங்களையும் ஊரிலிருந்து ஒதுக்கி வைக்கின்றனர். உறவினர்கள் அண்டை வீட்டார்கள் பேசாமல் தவிர்த்தல் என அவர்களை மன உளைச்சலுக்கு ஆளாக்குகிறார்கள்.

அதுமட்டுமல்லாமல் கோவில் விழா, திருமணம், இறுதிச் சடங்கு போன்ற நிகழ்ச்சிகளில் பங்கேற்க முடியாத நிலை ஏற்படுகிறது. இவ்வூரைச் சேர்ந்தவர்கள் அல்ல என்ற அடையாளம் கொடுக்கப்படுகிறது. கேலி, அவமானம், இகழ்ச்சி, வதந்திகள் பரப்புதல் போன்ற சமூக அவஸ்தைகளைச் சந்திக்கிறார்கள்.

தனிமை, பயம், அவமான உணர்வு, மனச்சோர்வு, மன அழுத்தம் போன்ற காரணங்களால் உளவியல் ரீதியாகவும் பாதிக்கப்படுகின்றனர். கலப்புத் திருமணம் என்பது சமத்துவ சமூகத்தின் அடையாளமாக பார்க்க வேண்டும். அதைத் தண்டிக்கும் சமூக அமைப்பு மாறாத வரை புறக்கணிப்புகள் தொடர்ந்து கொண்டேதான் இருக்கும். சட்டம், கல்வி, பொருளாதார சுயாதீனம், சமூக விழிப்புணர்வு இவை ஒன்றிணைந்தால்தான் நிரந்தரத் தீர்வு கிடைக்கும். ஜாதி ஒழியாமல் ஜாதி மீறிய திருமணங்களால் மட்டும் சமூக விடுதலையைத் தர முடியாது.

## கலப்புத் திருமணங்களின் பிரிவும் அதன் பாதிப்புகளும்

இந்திய சமூகத்தில் ஜாதி என்பது ஒருவரின் தனிப்பட்ட வாழ்க்கையைக் கூட ஆழமாகக் கட்டுப்படுத்தும் சமூக அமைப்பாக உள்ளது. காதல், திருமணம், குடும்பம் போன்ற தனிநபர் முடிவுகளிலும் ஜாதி முக்கிய இடத்தைப் பிடித்திருக்கிறது. குறிப்பாகக் கலப்புத் திருமணங்களில் உருவாகும் பிரச்சனைகள், சமூக மனநிலையின் கொடூர முகத்தை வெளிப்படுத்துகின்றன. குழந்தை பிறந்த பின் சாதி உணர்வு மேலோங்கி தன் கணவன், குழந்தையை விட்டுப் பிரிந்து தன் குடும்பத்துடன் சேர்ந்து வாழும் நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன.

"எறும்பு ஊரக் கல்லும் தேயும் என்பதைப் போல மனோரஞ்சிதத்தின் போதனைகளால் ரேவதியின் மனம் கொஞ்சம் கொஞ்சமாக மாறக் கடைசியில் ரவிசங்கர் மீது எரிச்சல் கொள்ளத் தொடங்கியது. குழந்தையின் மீதும் அவளின் எரிச்சலும் கோபமும் திரும்பியது. நான்கு ஆண்டுகளாகத்

தாம்பத்திய வாழ்க்கையில் அவள் கண்டது தான் என்ன? நிதானமாய் யோசித்தவளுக்கு எரிச்சல் தான் வந்தது"[3] (கவிபித்தன், மடவளி, பக்.148 149).

ஜாதி, குலம், கோத்திரம் மறந்து வயசுக் கோளாறால் அவசரப்பட்டு செய்த கலப்புத் திருமணத்தால் உறவுகளும் தான் பட்ட அவமானங்களையும் பெற்றோரும், உறவினர்களும் கூறும்போது ஜாதி உணர்வு மீண்டும் ஊட்டப்படுகிறது.

கணவனின் சமூக நிலை, வேலை, வாழ்வியல் ஆகியவற்றைத் தாழ்வாக மதிப்பிடும் எண்ணம் தோன்றுகிறது. குழந்தைகள் "எந்த சாதி" என்ற அடையாளக் குழப்பத்தில் சிக்க வைக்கப்படுகிறார்கள். இவ்வாறான சூழல்கள் பெண்ணின் மனதில் "சாதி பெரிது" என்ற எண்ணத்தை மீண்டும் உறுதிப்படுத்துகின்றன.

சாதி மேலாதிக்க உணர்வு அதிகரிக்கும்போது கணவன் மீது வெறுப்பு, அவமதிப்பு, அலட்சியம் போன்ற மனநிலைகள் உருவாகின்றன. கணவனின் குடும்பம், பண்பாடு பழக்கவழக்கங்களைத் தாழ்த்திப் பார்க்கும் மனநிலை உருவாகிறது. இதன் காரணங்களால் குடும்பத்தில் சண்டைகள் அதிகரிக்கின்றது. இவை இறுதியில் கணவனையும், குழந்தையையும் விட்டுப் பிரிந்து செல்லும் முடிவுக்கு வழி வகுக்கின்றன. இந்தப் பிரிவால் மிகப்பெரிய பாதிப்பை சந்திப்பவர்கள் குழந்தைகளே தாய் அல்லது தந்தையை பிரிந்து வாழும் குழந்தைகளுக்கு மனநலத்திலும், அடையாள உருவாக்கத்திலும் கடும் பாதிப்பு ஏற்படும் விதத்தை மடவளி நாவலில் ஆசிரியர் தெளிவாகப் பதிவு செய்துள்ளார்.

கலப்புத் திருமணம் என்பது இரு மனிதர்களின் வாழ்க்கையை இணைக்கும் செயலாக மட்டுமல்ல சாதி ஒழிப்பு நோக்கி எடுத்த ஒரு சமூக போராட்டம் ஆகும். ஆனால் மேல் சாதி என்ற மனநிலை தொடர்ந்து வலுப்பெறும் போது அந்தத் திருமணம் சிதைகிறது. கலப்புத் திருமணம் பிரச்சனை அல்ல அதை ஏற்க மறுக்கும் சாதியும், ஆணாதிக்க சமூக அமைப்பும் தான் பிரச்சனையாகும். கலப்புத் திருமணம் என்பது சட்டபூர்வமான உரிமையாக இருந்தாலும், நடைமுறையில் அது இன்னும் சாதி வன்முறையின் தீவிரக் காரணமாக மாறிக்கொண்டு இருக்கிறது. குறிப்பாக மேல் சாதி, கீழ் சாதி கலப்புத் திருமணங்கள் நிகழும் இடங்களில், ஒடுக்கப்பட்ட சமூகத்தினர் கடுமையான தாக்குதல்களையும், அச்சுறுத்தல்களையும் எதிர்கொள்வது சமூக யதார்த்தமாக உள்ளது.

## கீழ் சாதி பெண்கள் பாலியல் வன்கொடுமை

கீழ் சாதி பெண்கள் மீது நிகழும் பாலியல் வன்கொடுமை என்பது தனி நபர் குற்றமல்ல. அது சாதிய அதிகாரத்தின் கொடூர முகம். சமூக மாற்றம் என்பது சட்டங்களால் மட்டுமல்லாமல் மனநிலைகளின் மாற்றத்தாலும் உருவாக வேண்டும். கீழ் சாதி பெண்கள் பாலின அடக்குமுறையாலும், சாதி ஒடுக்கு முறையாலும் இரட்டைக் கொடுமைகளுக்கு உள்ளாகிறார்கள். ஒடுக்கப்பட்ட பெண்கள் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாகும் நிலை மிகவும் பரிதாபத்திற்குரியதாகும். இது ஒரு மனித உரிமை மீறல் மட்டுமல்ல, சமூக நீதிக்கும், பெண்களின் பாதுகாப்பிற்கும் எதிரான செயல். ஏனெனில் பாதிக்கப்பட்ட பெண்ணிற்குச் சமூக ஆதரவு குறைவு. பல பெண்கள் இந்த அனுபவங்களை வெளிப்படுத்த பயப்படுகிறார்கள். அவமானம், குற்றம் சாட்டல் மற்றும் நம்பிக்கை இல்லாத சூழ்நிலை போன்றவை பயத்திற்குக் காரணமாக அமைகிறது.

"இருள் சூழ் கானகத்து யார் காப்பார் என்னை"[4] (நற்றிணை பாடல், 172).

தனியாகச் சென்ற பெண்ணின் அச்சம் பாலியல் தாக்குதலுக்கானச் சமூகச் சூழலை இப்பாடல் வரி விளக்குகிறது. இலக்கியங்களில் பாலியல் வன்முறை நேரடியாக சொல்லப்படாவிட்டாலும், பெண் சம்மதம் மறுக்கப்படும் சூழல்கள், அச்சம், வலுக்கட்டாயம் ஆகியவை பாலியல் வன்கொடுமையின் சமூக வடிவங்களாக வெளிப்படுகின்றன.

"போ போயி வயித்ல கீற கருவ கலச்சிட்டு

உங்காளுங்கள யாரணா பாத்துக் கல்யாணம்

பன்னிக்க உன்னோரு வாட்டி இப்படி என்ன பக்க வராத"[5] (கவிப்பித்தன், சேங்கை, ப.69)

கீழ் சாதியைச் சேர்ந்த பெண்ணைக் காதலிப்பதாக கூறி அவளை நம்ப வைத்து, பின்னர் திருமணம் செய்து கொள்ளவதாக பொய்யான வாக்குறுதிகள் கொடுத்து ஏமாற்றுவது என்பது சமூகத்தின் உச்சகட்ட அவலம். அவளை அடைந்த பிறகு திருமணம் செய்து கொள்ளாமல் புறக்கணிக்கப்படுகிறாள். கர்ப்பம் அடைந்த பெண் செய்வதறியாமலும், வெளியில் செல்ல தைரியம் இல்லாமலும் தற்கொலை செய்து கொள்ளும் அவலத்தை சேங்கை நாவலின் ஆசிரியர் பதிவு செய்கிறார்.

"சுற்றும் முற்றும் யாருமில்லை. கை வைத்தாலும் கேட்க நாதியில்லை. ஒரே தாவாகத் தாவி அவளை இழுத்துக் கட்டிப்பிடித்து உதட்டைக் கடித்திருக்கிறான். தாமரை மொட்டுகள் போன்ற பிஞ்சு

மார்புகளைக் கசக்கியபடி, கீழே தள்ளி உடலெல்லாம் பிராண்டியிருக்கிறான்"[6] (கவிப்பித்தன் சேங்கை பக்கம் 213).

இது போன்ற பாலியல் சீண்டல்களைச் சில பெண்கள் தைரியத்துடன் பெற்றோர், உறவினர்களிடம் சொல்கிறார்கள். புகார் கொடுத்தாலும் மேல் சாதியினருக்கே ஆதரவாகக் காவல்துறை செயல்படுகிறது. நடந்த சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சி இல்லை எனவும் பணத்திற்காகப் பொய்யான குற்றச்சாட்டு வைப்பதாக உங்கள் மீது புகார் பதியப்படும் என்று கூறியும் கீழ் சாதியினரை அடக்குமுறைக்கு ஆளாக்கப்படுகிறார்கள்.

பதினைந்து குடிசைகளில் மட்டுமே கீழ் சாதி மக்கள் அவ்வூரில் வாழ்கின்றனர். ஊர் மக்களை எதிர்த்துக்கொண்டு வாழ முடியாது என்ற காரணத்தினால் தங்களுக்கு நடக்கும் கொடுமைகளைப் பொறுத்துக் கொண்டு வாழும் சமூக அவலத்தை நாவல் பதிவு செய்கிறது.

"வியர்வையில் உடல் நனைய நிற்கும் அவளையும் யாருமற்ற வெளியையும் ஒருசேரப் பார்த்தவன், சட்டென அவளைப் பிடித்து வரப்பில் தள்ளினான். சரேலன அவள் மீது விழுந்தவனின் கைகள் அவளின் மார்பில் முரட்டுத்தனமாய் விழுந்து படர திடீரென்று பிரம்மை பிடித்தவள் போல சுதாரித்துக் கொண்டு கத்தினாள்"[7] (கவிப்பித்தன் நீவாநதி, ப.128).

தனிமையில் இருக்கும் கீழ் ஜாதிப் பெண்களின் மீது பாலியல் சீண்டல்களைத் தொடர்ந்து அரங்கேற்றுபவர்களாக மேல் ஜாதி ஆண்கள் இருப்பதை நீவாநதி நாவல் மூலம் அறியலாம். சமூக மாற்றங்கள், அரசு நடவடிக்கைகள் மற்றும் பெண்கள் உரிமை இயக்கங்கள் ஒன்றிணைந்து செயல்படுவது இந்த பிரச்சனைக்குத் தீர்வாக அமையும்.

## கல்வி நிறுவனங்களில் தீண்டாமை

கல்வி என்பது சமத்துவத்தின் அடையாளமாகவே இருக்க வேண்டும். ஆனால் பல கல்வி நிறுவனங்களில் தீண்டாமை மற்றும் சாதியப் பாகுபாடு நிலவுகிறது. இதன் விளைவாக பட்டியலினத்தார் மற்றும் பழங்குடியினர் மன அழுத்தத்திற்கு உள்ளாகிறார்கள். தனிமை காரணமாக சில நேரங்களில் தற்கொலை செய்து கொள்ளும் நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள்.

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா

செய்கை வேற்றுமை யான்"[8] (திருக்குறள் அதிகாரம் பெருமை, குறள்.972)

எல்லா உயிர்களும் பிறப்பில் சமம். உயர்வு, தாழ்வு என்பது ஒருவரின் செயல்களால் மட்டுமே தீர்மானிக்கப்படுகிறது. சாதி, தீண்டாமை போன்ற பிறப்பை அடிப்படையாகக் கொண்ட வேறுபாடுகளை மறுப்பதாக இக்குறள் அமைகிறது.

"வேறு யாராவது பையன்கள் பானையிலிருந்து தண்ணீரை மொண்டு அவனுக்கு ஊற்றுவார்கள். அவன் அதைத்தான் தன் இரண்டு கைகளையும் ஏந்திதான் குடிக்க வேண்டும். அப்படி ஒவ்வொரு முறை கை ஏந்திக் குடிக்கும் போதும் வேண்டுமென்றே தலைமீது ஊற்றுவார்கள், மூக்கில் கூட ஊற்றுவார்கள் புரை ஏறி இரும்புவான். கண்களில் தண்ணீர் திரண்டு விடும். அதைப் பார்த்துக் கெக்கெக்கே எனச் சிரிப்பார்கள்"[9] (கவிப்பித்தன், சேங்கை, ப.229).

வகுப்பறையில் இம்மாணவர்கள் தனியாக அமர வைக்கப்படுகிறார்கள். மற்ற மாணவர்கள் விளையாட்டில் சேர்த்துக்கொள்ள மாட்டார்கள். மரத்தடியில் தான் மதிய உணவு வழங்கப்படும். இம்மானவர்களுக்கு பொதுக் கழிப்பறை மறுக்கப்படுகிறது. பள்ளிக்குச் சற்று தொலைவில் வேலி பக்கத்தில் தான் சிறுநீர் கழிப்பார்கள். அப்போதும் மேல் சாதி மாணவர்கள் மறைந்திருந்து கற்களால் அடித்து விட்டு சிரிப்பார்கள். மாலை வீட்டிற்கு செல்லும் வழியில் கீழ் சாதி மாணவன் மீது மனித மலத்தை எரிந்து விட்டு ஒளிந்து நின்று சிரிப்பார்கள். இதுபோன்ற செயல்களும், அவமானங்களும் தொடர்ந்து நிகழும் போது தாழ்த்தப்பட்ட மாணவர்கள் பள்ளிக்கு வர மாட்டார்கள் என்ற தவறான புரிதலே இந்த அத்துமீறல்களுக்குக் காரணமாக அமைகிறது.

பள்ளிப்படிப்பை முடித்துவிட்டு கல்லூரிக்குச் செல்லும் போதும், பேருந்து இருக்கைகளில் அமர்வதற்குப் பயப்படுகிறார்கள். ஊர்காரர்கள் யாராவது இருக்கையில் அமர்வதைப் பார்த்தால் திட்டுவார்கள் என்ற அச்சத்திலேயே பேருந்தில் பயணிக்கின்றனர். படிப்பை முடித்துவிட்டு வேலைக்குச் செல்லும் போதும் இந்நிலை தொடர்கிறது. தேநீர், சாப்பாடு போன்ற உணவு பொருட்களை வாங்கி வருவதற்கு இவர்கள் அனுமதிக்கப்படுவதில்லை. ஒதுக்கல்களை நீக்குவது சட்டத்தால் மட்டும் அல்ல மனநிலை மாற்றத்தாலும், கல்வியாலும், நிர்வாகத் தெளிவாளுமே சாத்தியமாகும்.

## அரசியல் களத்தில் தீண்டத்தகாதோர்

தீண்டாமை என்பது சமூகத்தின் அடித்தளத்தில் உருவான ஒரு கொடுமையான நடைமுறையாகும். காலப்போக்கில் சட்டரீதியாக தடை செய்யப்பட்டாலும் அரசியல் களத்தில் அதன் தாக்கங்கள் புதிய வடிவங்களில் தொடர்கிறது.

"வாக்கு கேட்க வரும் ஒரு வேட்பாளர் எந்த கட்சியை சேர்ந்தவர் என்பது மட்டும் முக்கியமானதல்ல. அவர் எந்தச் சாதியை சேர்ந்தவர் என்பதும் கூடப் போதுமானதல்ல. எல்லா அரசியல் கட்சிகளும் அந்த விஷயத்தில் போதிய விழிப்புடன் இருக்கின்றன"[10] (தேவி பாரதி, அற்ற குளத்து அற்புத மீன்கள் (கட்டுரை), ப.27).

தேவிபாரதி தம் கட்டுரையில் அரசியலிலும் சாதி எப்படி பார்க்கிறார்கள் என்று பதிவு செய்கிறார். ஒரு சில இடங்களில் சாதியின் பெயரைச் சொல்லி வாக்குச் சேகரிப்பதும் உண்டு. அதேபோல் சாதியின் பெயரை சொல்லி வென்றவர்களும் உண்டு. வேட்பாளர்களில் ஒருவர் வேறு இடத்தில் போட்டியிடுகிறார் என்றால் அவருடைய வெற்றியைத் தீர்மானிப்பது சாதி ஓட்டுகளே. வேட்பாளர்கள் ஓட்டுக்காக சாதி அடிப்படையில் எந்த ஏற்றத்தாழ்வும் பார்ப்பதில்லை. ஆனால், வெற்றிக்குப் பிறகு மக்களின் சாதி மட்டுமே அவர்களின் கண்களுக்குத் தெரிகிறது. தேர்தல் சமயத்தில் தாழ்த்தப்பட்ட விளிம்பு நிலை மக்கள் அதிகம் உள்ள தொகுதிகளில் வேட்பாளர்கள் மிக நெருக்கமாக பழகுவார்கள். தேர்தலுக்குப் பின் புழுவைப் பார்ப்பது போல அவர்கள் கண்ணோட்டம் மாறுகிறது.

## தேர்தலில் தாழ்த்தப்பட்ட மக்கள் செய்யும் வேலைகள்

வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல், மேடை அமைத்தல், கட்சி கொடி கட்டுதல், பேனர் மற்றும் போஸ்டர் ஒட்டுதல், பந்தல் அமைத்தல், மக்களைக் கூட்டங்களுக்கு அழைத்துச் செல்வது, கோஷம் எழுப்புவது, பிரச்சார வாகனங்களில் கூட்டம் நிரப்புதல், சுவர் எழுத்து, கைதட்டல், சில இடங்களில் வாக்காளர்களை மறைமுகமாக பயமுறுத்துதல் போன்ற பல வேலைகளைச் செய்பவர்களாக இருக்கிறார்கள். ஆனால் தேர்தல் முடிந்தபின் முழுமையாக அலட்சியப்படுத்துகிறார்கள் என்ற நடைமுறை சிக்கலை மடவளி நாவலில் ஆசிரியர் எடுத்துரைக்கிறார்.

சேரியில் வாழும் கிறிஸ்தவர்களுக்கும், காலணியில் வாழும் அருந்ததியினருக்கும் தினமும் சாராயமும், வாரத்திற்கு இரண்டு மாடுகளும் இறைச்சிக்காக வழங்கினார்கள். காமாட்சியம்மன் விளக்கில் சத்தியம் செய்ததால் கடவுளுக்குப் பயந்து வாக்களிக்கும் நிலைக்கு தள்ளப்படுகிறார்கள். மக்களுக்குத் தேவையான அன்றாட பயன்பாட்டுப் பொருட்களை வழங்கி ஓட்டு கேட்பது வழக்கமான அரசியல் யுக்திகளில் ஒன்றாக மாறிவிட்டது. இவை தேர்தல் சட்டப்படி சட்ட விரோதமான செயலாகக் கருதப்பட்டாலும் சமூக யதார்த்தமாகவே பார்க்கப்படுகிறது. வறுமை, சாதி அடிப்படையிலான அரசியல், அதிகார சமநிலையின்மை போன்ற காரணங்களால் இத்தகைய நடைமுறைகள் தொடர்வதாக ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன.

## தேர்தல் வெற்றிக்கு பின் தாழ்த்தப்பட்டோர் நிலை

தேர்தல் காலத்தில் வாக்கு வங்கியாக அணுகப்படும் தாழ்த்தப்பட்ட சமூகங்கள், வெற்றிக்குப் பின் பெரும்பாலும் அவமதிப்புக்கு உள்ளாகிறார்கள். தேர்தல் முடிந்தவுடன் பிரதிநிதிகள் இம்மக்களை நேரடியாக சந்திப்பதை பெரும்பாலும் தவிர்த்துக் கொள்கிறார்கள்.

"எனக்கு ஓட்டு போட்டா எங்க பொண்ணை இஸ்த்துகினு பூடுவீங்களா நீங்க? ஏதோ எலெக்சன்ல கூடமாட வேல செய்றானேன்னு ஊட்ல சேர்த்து வெச்சிகினு இர்ந்தா எங்க ஊட்டு பொண்ணுமேலயே கெய்ய வெக்கிர்தா? நான் மட்டும் தலைவரா இல்லைனா வெச்சிக்க நானே இறங்கி உங்கள கண்டதுண்டுமா வெட்டி போட்டிருப்பேங் இவுங்களாவது ஒதச்சதோட உட்டாங்க இன்னிக்கு ராத்திரியே எங்க பொண்ணு இங்க வந்தாவனும் இல்லன்னா இந்தத் தலைவர் பதவி இல்லனாக்கூட மயிராச்சி உங்கள வெட்டிட்டுதாங் மறுவேலயப் பாப்பங்"[11] (கவிப்பித்தன், மடவளி, ப.105).

இந்தியத் தேர்தல் அரசியலில் தாழ்த்தப்பட்ட மக்களின் உழைப்பு மிகப் பெருமளவில் பயன்படுத்தப்படுகிறது. ஆனால், அந்த உழைப்புக்கான மரியாதையும், அரசியல் பிரதிநிதித்துவமும், தேர்தலுக்குப் பின் மறுக்கப்படுவது ஒரு தொடர்ச்சியான நிகழ்வாக உள்ளது. மேல் சாதி, கீழ் சாதி இடையேயான கலப்புத் திருமணத்தால், மேல் சாதியினர், கீழ் சாதியினரை தாக்கினர். வீடுகளை சேதப்படுத்தி, உயிர் அச்சுறுத்தல் ஏற்படுத்தினர். உயிருக்கு பயந்த மக்கள் வாக்களித்து வெற்றி பெறச் செய்த வேட்பாளரிடம் தங்களுக்கான நியாயத்தையும், பாதுகாப்பையும் வேண்டினர். வேட்பாளரோ நடந்தேறிய வன்முறைக்கு நியாயம் பேச மறுப்பதோடு பாதிக்கப்பட்ட மக்களையே மிரட்டுகிறார். வன்முறையைக் கண்டிக்கவில்லை. காவல்துறையில் புகார் அளிக்க உதவவில்லை. பாதிக்கப்பட்டவர்களுக்குப் பாதுகாக்கும் வழங்கவில்லை. இச்செயல் வன்முறையை ஆதரிப்பதற்குச்

சம்மாகும். மேல் சாதி வன்முறையாளர்களுக்கு அரசியல் பாதுகாப்பு வழங்கும் விதத்தை மடவளி நாவலின் மூலம் அறிய முடிகிறது.

"சேரிக்காரங்க நமுக்கு ஓட்டு போடலன்னு அடிக்கிறீங்களே.

மொதல்ல ஓட்டு எண்ணி ரிசல்ட் வரட்டும் அப்பறம் பேசலாம் எதுவார்ந்தாலும்"[12] (கவிப்பித்தன், மடவளி, ப.283)

தாழ்த்தப்பட்ட மக்கள் வாக்களிக்கவில்லை என்ற காரணத்தால் அவர்கள் மீது உடல், மன, சமூக வன்முறைகள் நடத்தப்படுவது ஒரு கொடூரமான சமூக யதார்த்தமாக உள்ளது. தேர்தல் காலத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வாக்குறுதிகள் அளித்து தேர்தல் முடிந்தவுடன் அவர்கள் வாக்களிக்கவில்லை என்ற காரணத்திற்காக தண்டிப்பது சமத்துவ உரிமை, வாக்குரிமை, மனித உரிமைகள் என அனைத்திற்கும் எதிரானது ஆகும். இப்படியான தாக்குதல்கள் நடைபெறும் போது அது வன்கொடுமை சட்டத்தின் கீழ் கடுமையான குற்றமாகும். ஆனால் பல இடங்களில் காவல்துறை வழக்குப் பதிவு செய்ய மறுக்கவும் சமாதானம் பேச அழுத்தம் கொடுப்பதும் நீதியை மறுக்கும் செயல்களாக உள்ளது.

## முடிவுரை

தாழ்த்தப்பட்ட பிரிவினைச் சார்ந்த பெண்கள் மீது நடைபெறும் பாலியல் வன்கொடுமைக்குத் தீர்வு என்பது தனிப்பட்ட சட்ட நடவடிக்கையால் மட்டும் சாத்தியம் இல்லை. பல நிலைகளில் ஒருங்கிணைந்த செயல்பாடுகள் அவசியம். குற்றவாளிகளை தண்டிப்பதில் மட்டுமல்ல பாதிக்கப்பட்ட பெண்ணைப் பாதுகாப்பதிலும் உள்ளது. பெண்ணின் உடல் மீது சாதி என்கிற அதிகாரம் செயல்படும் வரை சமத்துவம் முழுமை பெறாது. அந்த அதிகாரத்தை உடைப்பதே உண்மையான தீர்வாக அமையும். தேர்தலில் தாழ்த்தப்பட்ட மக்களை பயன்படுத்திவிட்டு அவர்கள் தாக்கப்படும் போதும், ஒடுக்கப்படும் போதும் மௌனம் காக்கும் அரசியல் பிரதிநிதிகள் ஜனநாயகத்தின் காவலர்கள் அல்ல. அவர்கள் தோல்வியின் சாட்சிகளாகவே உள்ளனர். வாக்கு மட்டும் மதிக்கப்படுவது ஜனநாயகம் அல்ல. வாக்காளரின் வாழ்வும், உரிமையும் பாதுகாக்கப்படுவது தான் உண்மையான ஜனநாயகம். சாதி கலப்பு திருமணத்தை எதிர்த்து நிகழும் வன்முறைகள் சட்டத்திற்கு மட்டுமல்ல மனிதருக்கும் எதிரானது. கலப்புத் திருமணத்தை சமூக முன்னேற்றமாக விளக்கும் விழிப்புணர்வு நடத்துதல், காவல் பாதுகாப்பு, ஆணவக் கொலை மற்றும் வழக்குகளின் கடுமையான தண்டனை போன்றவை சாதி வன்முறைக்குத் தீர்வாக அமையும்.

## References

கவிப்பித்தன், மடவளி, ப.100.

நற்றிணை, பாடல் எண்.172

கவிப்பித்தன், சேங்கை, ப.69.

கவிப்பித்தன், நீவாநதி, ப.128.

திருக்குறள், அதிகாரம் பெருமை, குறள்.972.

கவிப்பித்தன், சேங்கை, ப.229.

தேவிபாரதி, அற்றகுளத்து அற்புத மீன்கள் (கட்டுரை), ப.27.

கவிப்பித்தன், மடவளி, ப.105.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License